கலைஞரும் நானும்

94

கலைஞர் எல்லாவற்றையும் சரிசெய்யக்கூடியவர். சிறிய தவறுகளைக் கூட "அப்படியில்லை, இப்படி" எனச் சுட்டிக்காட்டும் ஒட்டக்கூத்தர்போல, எங்களுக்கு இருந்தவர் கலைஞர். ஆம், தமிழ்நாட்டின் அனைத்தையும் சரிசெய்த ஒட்டக்கூத்தர் நம் கலைஞர் என தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநர் பாரதிராஜா.

"பொது வாழ்க்கையில் தாங்க வேண்டும்!"

பாரதிராஜா, இயக்குநர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் பல அனுபவங்கள், பல உரையாடல்கள். அவருடன் முரண்பட்டும், அவரை நேசித்தும், அவர் தனிப்பாசம் கொண்டிருந்ததும், எனப் பல நினைவுகள். நான் என்னைச் சுற்றியுள்ளவர்களிடம் அடிக்கடிச் சொல்வது, "அவர்கிட்ட ஏதோ மந்திரம் இருக்குய்யா" என்பதுதான். ஆமாம், அவரிடம் மந்திரச் சொற்கள் இருந்தன. உலகத் தமிழர்களையெல்லாம் தன் மந்திரச் சொற்களால் வருடியவர். அவரது சொற்களால், நம்மை வருடியும், நெருடியும் நம் முன் பிரமாண்டமாக நிற்கும் மந்திரம் கலைஞர்.

நடிகர் திலகமும், முத்தமிழறிஞரும் இல்லையென்றால், இந்த பாரதிராஜாவே இல்லை எனலாம். நடிகர் திலகம் அவர்கள், கலைஞர் அவர்களின் வசனத்தை உச்சரித்து, பட்டிதொட்டியெல்லாம் தமிழ்மணம் பரப்பியபோது, பள்ளிச் சிறுவனாக இருந்த எங்களுக்கு எல்லாம் பைத்தியம் பிடித்தது. 'பராசக்தி', 'மந்திரிகுமாரி', 'மனோகரா' எல்லாம் உசுப்பி எடுத்த படங்கள். உண்மையைச் சொல்லப்போனால், சொந்த ஊரிலிருந்து சென்னைக்கு விரட்டிய படங்கள். அந்த வகையில், அவரை நேரில் சந்திப்பதற்கு முன்பே அவர் வசனங்களை மனப்பாடம் செய்து, அதன் வழி உருவானவன் நான் எனலாம்.

முதல் சந்திப்பு

நான் முதன்முதலில் அவரைச் சந்தித்த நிகழ்வு விசித்திரமானது. நான், திரைப்படங்களை இயக்கி, முன்னணி இயக்குநரான பின்புதான், அவருடன் சந்திப்பு நிகழ்ந்தது.

எம்.ஜி.ஆர், 'மதிப்புறு முனைவர் பட்டம்' பெற்றதற்காக, என் தலைமையில் திரையுலகம் ஒரு விழா எடுத்தது. அப்போது, மரியாதை நிமித்தமாக, கலைஞருக்கும் அழைப்பிதழ் கொடுக்கவேண்டும் என்பதற்காக, பஞ்சு அருணாசலம், ஏ.வி.எம்.சரவணன், கே. பாலச்சந்தர் ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன். அது சம்பிரதாயமான அழைப்பு என்பது அவருக்கும் தெரியும்.

நான், அப்போதுதான் அவரை முதல் முறையாக நேரில் பார்க்கிறேன். என் படம் பார்த்திருப்பாரா என்பதெல்லாம் அப்போது எனக்குத் தெரியாது. ஆனால், அந்தச் சந்திப்பின்போது என்னை உரிமையாக, "பாரதி இப்படி வந்து உட்கார்" என என்னை வரவழைத்த விதம், என்னை உணர்ச்சி வசப்பட வைத்தது. வியப்பாகவும் இருந்தது. பேசிக்கொண்டிருந்து விட்டு புறப்படும் முன் கேட்கிறார். "சரி, அழைக்கிறீங்க, நிகழ்ச்சிக்கு வந்துவிட்டால் என்ன செய்வீங்க" எனக் கேட்டார். நாங்கள் ஒருவாறு சமாளித்து, "அழைக்கவேண்டியது எங்களது கடமை" எனப் பதிலளித்தோம்.

புறப்படும் முன், என்னை அழைத்தவர், "ஒரு தமிழன் திரையுலகிற்கு வந்து சில விஷயங்களை உடைச்சிட்ட, பெருமையாக இருக்கிறது. உன் படங்களை எல்லாம் பார்த்தேன். உன்னை எப்படி அழைத்து பேசுவது என நினைத்தேன், என மனதார வாழ்த்தியதுடன், இந்த இடத்தில் நீ இருக்க என நெஞ்சைத் தொட்டுக் காட்டித் தட்டிக் கொடுத்து அனுப்பினார். மறக்க முடியாத முதல் சந்திப்பாக அது அமைந்தது.

அதன்பின்னர், அவர் மாபெரும் மனிதப் பண்பாளர் என்பதை அறிவதற்கான சந்தர்ப்பமாக மற்றொரு சந்திப்பினைக் குறிப்பிடுவேன்.

பொதுவாழ்வில் தாங்கும் சக்தி

'திரைப்படத் தொழிலாளர் சங்கம்' தொடர்பாக பிரச்சினை. அதனைத் தீர்த்து வைப்பதற்காக அவர் தலைமையில், பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது அவர் முதலமைச்சராக இருந்தார்.

எல்லோரும் பேசிக்கொண்டிருக்கையில், நான் நின்றுகொண்டிருந்தேன். "உட்காரு, பாரதி" என்றார். "மன்னிக்கனும்", என்று ஏதோ சொல்லிவிட்டு, அறையை விட்டு வெளியே வந்து நின்றேன். உடன் வந்திருந்த ராதா ரவி அவர்கள், "என்ன பாரதி அவர் முன்னாடி இப்படி சொல்லிட்டீங்க" என வருத்தப்பட்டார். அப்போதுதான் எனக்கு, அவர் இப்போது முதலமைச்சர் என்கிற எண்ணம் 'ஓடு, அவரிடம் இப்படி பேசிவிட்டோமே' என்கிற வருத்தம் வந்தது.

'சரி, அவரிடம் மன்னிப்பு கேட்டுச் செல்வோம்' என காத்திருந்தேன்.

நான் எப்போதும் இப்படித்தான் என்பது அவருக்கும் தெரியும் என்பதால், "பாரதியை இருக்கச் சொல்லு" என கூறி இருந்தார். அந்தப் பேச்சுவார்த்தை ஒரு மணி நேரம் நீண்டது. அதன் பின்னர் அறைக்கு அழைத்தவர், எனக்கு சால்வை போர்த்தி, கட்டி அணைத்து, "பாரதி பொதுவாழ்க்கைக்கு வந்துவிட்டால் எல்லாவற்றையும் தாங்கும் சக்தி வேண்டும். இப்படி வாங்கி, இப்படி போட்டுவிடவேண்டும்" எனக்கூறினார். நான் அந்தக் கணம் உடைந்துவிட்டேன். அவர் அரசியல்வாதி, கலை உச்சம் என எல்லாவற்றையும் தாண்டி, சிறந்த மனிதம் கொண்டவர், ஆகச் சிறந்த பண்பாளர் என்பேன். மனிதநேசம் கொண்டவர்.

திரைப்பட வாய்ப்பு

பல திரைப்படங்களை அவருடன் சேர்ந்து பார்த்திருக்கிறேன். படம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சட்டென சிலேடையாக ஒன்று சொல்வார். 'ப்ளாக் ஹியூமர்' என்பார்களே அதுபோல அந்த நேரத்தில் ஹாஸ்யமாக இருக்கும். பிறகு நினைத்தாலும், அது சிரிப்பை வரவழைக்கும். அதுபோல, பல படங்களில், அந்தப் படத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்பதையும் ''இப்படித்தானே இருக்கும்'' எனவும் சொல்லிவிடுவார். கலைத்துறையில் அப்படி ஒரு அனுபவம் கொண்டவர் கலைஞர்.

அவரது எழுத்தில் ஒரு திரைப்படத்தை செய்ய வேண்டிய வாய்ப்பு வந்தது. ஆனால், அப்போதிருந்த சூழலில் என்னால் அதைச் செய்ய முடியவில்லை என்றாலும், எனது பட்டறையில் இருந்த இயக்குநர் மணிவண்ணன் அதைச் செய்தார். அந்தப் படத்தின் முதல்காட்சியை கலைஞருடன் இணைந்து பார்த்து, அவரது சிலேடைகளை ரசித்தது மறக்க முடியாதது.

அவருடன் முரண்பட்ட காலங்கள் உண்டு. ஆனால், அவையெல்லாம் தந்தை மகன் உறவுபோல அர்த்தம் கொண்டவை. அதை

அரசியலிலும், திரையுலகிலும் அவர் தமிழர்களின் வெளிச்சமாக இருந்தவர். அவர் மறைந்த அன்று, ஒட்டுமொத்தத் திரையுலகமும் இருட்டான நாள் என நான் பல மேடைகளில் பதிவு செய்திருக்கிறேன்.

கலைஞரும் அறிந்தவர் என்பதால், அவற்றைப் பொருட்படுத்தியதில்லை. அரசியலிலும், திரையுலகிலும் அவர் தமிழர்களின் வெளிச்சமாக இருந்தவர். அவர் மறைந்த அன்று, ஒட்டுமொத்த திரையுலகமும் இருட்டான நாள் என நான் பல மேடைகளில் பதிவு செய்திருக்கிறேன்.

தமிழ்த் திரையுலகின் நூற்றாண்டுக் கொண்டாட்டம் நடந்தபோது, அவரை தவிர்த்ததற்கும் நான் கண்டனம் தெரிவித்திருந்தேன். அவர் இல்லாமல் நூற்றாண்டுத் தமிழ் சினிமா இல்லை. அவர் இல்லாமல், தமிழ் நாட்டின் கலை வளர்ச்சி இல்லை. அவர் இல்லாமல் இருந்தாலும், அவரின் ஆன்மா என்றும் தமிழ்நாட்டில் கலை உலகில் நிறைந்திருக்கும்.

தொகுப்பு :
நீரை மகேந்திரன் ....பகிர்வார்கள்

அபகரிக்க அலையும் கும்பல்கள்!

சிந்துவெளி நாகரிக வரலாற்றை, அபகரித்துக் கொள்ள 'ஆரியப் புரட்டுகள்' மூலம் 'சரஸ்வதி நதி நாகரிகம்' எனக் கட்டமைக்க முயல்வது குறித்து, சிந்துவெளி ஆய்வாளர் ஆர்.பாலகிருஷ்ணன் எழுதியுள்ள நையாண்டிப் பதிவு.

"சிந்து : "சரசு, நீயி முகநூல் ல இருக்கியா சரசு"

சரசு : "இருக்கிறேன்னும் சொல்லலாம்... இல்லைன்னும் சொல்லலாம்ங்க்கா. என்னோட முகநூல் ல என்னோட 'நிலைப் பதிவு' படம் எதுவும் இருக்காது. நானு எங்க இருந்தேன்; எங்க இருக்கிறேன் னு எதுவுமே 'டீடெயில்ஸ்' இருக்காது. ஆனா, 'அக்கவுண்ட்' இருக்குக்கா... ஆனா, யாரு கண்லயும் படமாட்டேன்ங்க்கா...

சிந்து : "இப்ப புரியிது சரசு. ஒன்னோட சொந்தக்காரய்ங்க எல்லாம் எப்படி 'தரைக்குக் கீழ' இயல்பா செயல்படுறாய்ங்கன்னு.... இன்னைக்கா... நேத்தா... மூவாயிரம் வருஷக் கணக்கு சரசு..."

சரசு : "என்னமோக்கா அவிங்கள.. எனக்கும் தெரியாது; அவிங்களுக்கும் என்னைத் தெரியாது. ஆனா 'சரசு' 'சரசு' ன்னு உயிர விடுவாய்ங்க அக்கா..."

சிந்து : "அது சரி, சரசு, சிந்துவெளி எழுத்துக்கள ஒங்க 'நிபுணர்' ஒருத்தர் கம்ப்ளீட்டா படிச்சிட்டதா ஒங்க 'வக்கீல் சிண்டு முருகன்' அஃபிடவிட் போட்டிருக்காராமே! இது என்னா சரசு புதுப்பொரளி..."

சரசு: "நானே "யூடியூப்ல" தான் பார்த்தேன்ங்கா..."

சிந்து : "நீயே சொல்லு சரசு, குதிரையே இல்லாத ஊர்ல "குதிரை"ன்னு எப்படி போர்டு எழுதி வைப்பாய்ங்க சரசு..?"

சரசு : "மொகஞ்சதாரோ" படத்தில ரித்திக் ரோஷன் குதிரையில தானக்கா வருவாரு..."

சிந்து : 'நீயி அப்படி வர்றீயா... என்னமோ போ சரசு.... 'சிந்துவெளியில' இருக்கும்போது 'ஜாலியா' தீபாவளி கொண்டாடு னோம்னு அயலகத்தில் வாழும் ஒங்க சொந்தக்காரய்ங்க யாரும் முகநூல்/ இன்ஸ்டா/ எக்ஸ் பதிவு போட்ருக்காய்ங்களான்னு பார்க்கப் போறேன்".

சரசு : "சரிக்கா..."

என்று அந்தப் பதிவு கிண்டலாக முடிகிறது.

ஃப்ளாஷ்பேக்

"வாழ்த்துகள், சிறந்த மருத்துவர்களாக வேண்டும்!"

மருத்துவர் ஆ. எடின்டன் ஆறுமுகம்

2000-ஆம் ஆண்டு, மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்களின் உதவித் தொகையை உயர்த்தித் தரக் கோரி, முதுநிலை மருத்துவ மாணவர்களும் பயிற்சி மருத்துவ மாணவர்களும் மாநிலம் தழுவிய போராட்டம் நடத்தினார்கள். எந்த ஒரு அரசும் செய்திடாத, செவிசாய்க்காத கோரிக்கைகளைத் தாயுள்ளம் கொண்ட தன்னிகரில்லாத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டதோடு, உதவித் தொகையை 1,300 ரூபாயில் இருந்து 3,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்கினார்.இந்த மகத்தான அறிவிப்பை அடுத்து, தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, சால்வை அணிவித்து மரியாதை செய்தோம். அப்போது "வாழ்த்துகள், வருங்காலத்தில் சிறந்த மருத்துவர்களாக வர வேண்டும்" என்று வாழ்த்தி மகிழ்ந்தார்.

– மருத்துவர் ஆ.எடின்டன் ஆறுமுகம், எம்.டி.எஸ்.
மாவட்ட மருத்துவ அணித் துணை அமைப்பாளர்,
சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

கச்சத் தீவு விவகாரம்!

1968-ஆம் ஆண்டில் மக்களவையில் கச்சத் தீவு குறித்த விவாதம் நடைபெற்றது. அன்றைய வெளியுறவுத் துறை துணை அமைச்சர் சுரேந்திர பால் சிங், பதிலளிக்கையில், "கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்பது பற்றி, இப்போது இரு நாடுகளுக்கு இடையேயும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதனால், சட்டவிரோதமாகவோ, அல்லது நிர்பந்தமாகவோ இலங்கை பிடித்துக் கொண்டதாகச் சொல்வது தவறு என்றார். கச்சத் தீவு உரிமையை நிலைநாட்டுவதில், ஒன்றிய அரசு அலட்சியம் காட்டு வதாக, கழக உறுப்பினர் கந்தப்பன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திராவிடத்தால் வாழ்கிறோம்

648

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131